1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படியொரு திட்டம் அரசிடம் இப்பொழுது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார் துறை மூலம் சட்டக் கல்வி அமைப்பதற்கு அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறதா ? தனியார் துறையில் சட்டக் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி கோரி அரசுக்கு மனு வந்துள்ளதா ? அப்படி வந்தன என்றால், எத்தனை மனுக்கள் வந்தன ? அல்லது இப்படிப் புதிய முறையில் சட்டக் கல்லூரியைத் தோற்றுவிக்க வேண்டாமென்ற கருத்து அரசிற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, நாம் யாருக்கும் அனுமதி தரவில்லை. ஆனால், சேலத்தில் ஒருவர் ஒரு கல்லூரியை அமைப்பதற்கு உயர்நீதி மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் பூங்குளம் என்னுமிடத்திலுள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகக் கோரி வந்துள்ள மனு.

485 (*வினா எண் 21636) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூங்குளம் என்னுமிடத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசிடம் மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (அ) 1982-83 மற்றும் 1983-84 இல் இப்பள்ளியை ஓர் அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கோரிக்கை மனுக்கள் வந்தன. ஆனால் உயர்மட்டக் குழு இக் கோரிக்கையை ஏற்க பரிந்துரை செய்யவில்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்பதற்காக, இரண்டாண்டுகளுக்கு முன் செலுத்த வேண்டிய பணம் முழுவதையும் செலுத்தியாகிவிட்டது. எல்லாத் தகுதிகளும் இருந்தும் ஏன் அதை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவில்லை என்று அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபோல பல்வேறு இடங்களிலே அந்தப் பணத்தைக் கட்டி விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆனால் நாம், அந்தப் பல்வேறு பகுதிகளையும் பொறுத்தவரையில், அந்தத் தேவைகளையும் மற்றவைகளையும் கருத்தில் வைத்து, அந்தக் குழு சிபார்சு செய்யும் அடிப்படையில் அனுமதி வழங்கியிருக்கிறோம். இதற்கு முன் நாம் திறந்து வந்தபொழுது இது பிரச்சினையாக இல்லை. இப்பொழுது நாம் குறைவாகத் திறக்கின்ற காரணத்தினால் இந்தப் பிரச்சினை உருவாகியிருக்கிறது. மேலும், புதிதாகத் திறந்த பழைய பள்ளிகளிலே போதுமான அளவிற்கு எண்ணிக்கை இல்லாமல் இருக்கின்ற ஒரு நிலைமையும் உருவாகியிருக்கிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று நான் சொல்வதற்குக் காரணம், நடுநிலைப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்றவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் ஏறக்குறைய ஐந்து கிலோமீட்டர் அல்லது பத்து கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே இட வசதி இருக்கின்றது. பணமும் கட்டியாகிவிட்டது. இப்படி எல்லாத் தகுதிகளும் இருந்தும் ஏன் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது ஆரம்பிக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கோரிக்கையை மறுபடியும் அவர்கள் அனுப்புவார்களேயானால் அந்தக் குழு அதைப் பரிசீலிக்கும்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, பூங்குளம் என்னும் இடத்திலிருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான காரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதேபோல் பல பகுதிகளிலே நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்குரிய அந்த அந்தஸ்துகள் பற்றி முறையாக அரசுக்கு அனுப்பவில்லை என்ற காரணத்தால் அவை அந்த அந்தஸ்து பெறவில்லை. ஆகவே முறையாக அவற்றை அனுப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு போய் இதிலே முயற்சி எடுப்பதில்லை. அங்கே இருக்கின்ற பொதுமக்கள் ஒரு குழுவைப் போட்டு அந்தக் கோரிக்கையை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அனுப்புகின்ற முறையைத்தான் இப்போது பின்பற்றி வருகிறார்கள். அந்த முறையில் அனுப்பித்தான் புதிய உயர்நிலைப் பள்ளிகளைப் பெற்று வருகிறார்கள்.

திரு. இல. புலராமன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பூங்குளத்தில் மட்டுமல்லாமல் பல பின்தங்கிய பகுதிகளில் படிப்பறிவு இல்லாத மக்களுக்கு கல்வி தரவேண்டும். அதிலும் குறிப்பாக பெண்களுக்குக் கல்வி தரவேண்டும் என்ற உணர்வோடு—ஏனென்றால் பெண்களால் அதிக தூரத்திற்குச் சென்று படிக்க முடியாது—பின்தங்கிய பகுதிகளில் அந்தந்த இடங்களில் தகுதிக்கேற்ப இந்த ஆண்டாவது பள்ளிகளைத் திறக்க அனுமதி வழங்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தக் காரணங்கள் எல்லாம் அரசு ஏற்கெனவே உணர்ந்துதான் செயல்படுகின்றது. ஆனால் கோரிக்கை அந்தந்த இடங்களிலிருந்து வர வேண்டும். அப்படி வருகின்றபோது அந்த கோரிக்கைகளை வைத்து இந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அந்தக் குழுவிடம் நாம் சொல்லி இருக்கிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா ஆய்வுப் பிரிவு.

486 (*வினா எண் 21735—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா ஆய்வுப் பிரிவுப் பணி துவங்கிவிட்டதா ?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) துவக்கப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்காக ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 1,11,000 (ரூபாய் ஒரு இலட்சத்து, பதினோராயிரம் மட்டும்) செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்துச் சில்லரை ரூபாய் செலவாகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிதியை அரசாங்கம் ஏற்கின்றதா அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கின்றதா ? எத்தனை ஆண்டுகளுக்குள் இந்தப் பணி முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.